(உ) வேலூர் நகரத்திற்கு வாரத்திற்கு ஒருநாள் மட்டுமே குடிநீர் வழங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரத்திற்கு வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இந்த ஆண்டு பருவமழை உரிய காலத்தில் பொழியாத காரணத்தால் ஏற்பட்டுள்ள மிக வறட்சியான காலத்திலும் கூட வேலூர் நகரில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை சுமார் $1\frac{1}{4}$ மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

அண்மையில் பெய்த சிறிதளவு மழையின் காரணமாக பாலாற்று கிணறுகளில் ஊற்றுநீர் கூடுதலாக வந்துள்ளதால் தற்போது 4 நாட்களுக்கு ஒருமுறை சற்று கூடுதலான நேரத்தில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் இல்லாத நாட்களில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று லாரிகள் மூலமாகவும், அரசின் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு வாடகை லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.

வேலூர் நகராட்சிக்கு ஏற்கெனவே உள்ள திட்டங்களின் மூலம் குடிநீர் பற்றாக்குறை இருந்து வருவதால் குடிநீர் அபி விருத்தி திட்டப் பணிக்காக சுழல் நிதி கணக்கிலிருந்து ரூ. 9.75 லட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப் பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெறுகிறது. இந்த ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும் வேலூர் நகராட்சிக்கு நிரந்தரமாக குடிநீர் தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

பிற்பகல் 12-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் பார்த்தேன். இதிலே அதிகாரிகள் உண்மையான தகவல்களை அமைச்சரவர்களுக்குத் தரவில்லை; தவறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் முதலிலே அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 4 நாட்களுக்கு ஒரு நாள் தண்ணீர் விநியோகிப்பதாக அதிகாரிகள் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். 7 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் சில பகுதிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதே இல்லை. வாடகை லாரி வைத்து தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வாடகை லாரியில் ஒரு நாள் கூட தண்ணீர் வந்ததாக வரலாறே இல்லை. அது நன்றாகத் தெரியும். முனிசிபாலிடிக்குச் சொந்தமான லாரியில் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அதுவும் கல்யாண மண்டபத்திற்கும் வேறு டானரிகளுக்கும் மற்றவைகளுக்கும் முறைகேடாகக் கொண்டு போகப்படுகிறது. இப்படி முறைகேடாக தண்ணீர் விநியோகம் செய்கிற நிலைமைதான் அங்கே இருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பலமுறை நான் புகார் தந்திருக்கிறேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஏற்கனவே சுழல் நிதியிலிருந்து 9.75 இலட்சம் ரூபாய் 'கமிஷனர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷ'னிடமிருந்து பெற்றுத் தந்திருக்கிறோம். ஆனால் குடிநீர் வடிகால் வாரியம் இன்னும் ரிப்போர்ட் தராமல் இருக்கிறது. பெண்ணையாற்றுத் திட்டத்தை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். இல்லை என்றால் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுவேன். அதிலும் ஒரே உறுப்பினர் இரண்டாவது தடவை கொடுத்திருக்கிறீர்கள். அதனால் விதிமுறைகளின்படி, கேள்வி கேட்க முடியாது.

திரு. சி. ஞானசேகரன்: தலைவரவர்களே, நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வதெல்லாம் வேலூர் நகரிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு தினந்தோறும் குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல் என்று ஒரு குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதை தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்கள் எல்லாம் உண்மையான தகவல்கள்; தவறான தகவலைத் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தருவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அதிகாரிகளிடம் அறிக்கையைப் பெற்றதற்குப் பின்னால் we have substantiated through other officers also within the department முனிசிப்பல் எஞ்ஜினீயர் சொல்லியிருக்கிறார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நேற்று மாஸ் டிபார்ட்மென்டிலும் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்படி எல்லாம் சொல்லுவார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காகத்தான் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். கடந்த மாதம் இதே புகாரைக் கொடுத்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வறட்சி நிவாரண நிதியிலிருந்து 2.70 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. லாரிகளில் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டிருக் கிறது. ஏதோ அரசியல் முக்கியத்துவத்திற்காகவோ அல்லது விளம்பரத்திற்காகவோ இப்படி ஒன்றையுமே செய்யவில்லை, டானரிக்கும், ஃபாக்டரிக்கும் அனுப்பப்பட்டது என்று சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அமைச்சர் அதற்குப் பதில் சொல்கிறார். நீங்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்று சொன் னீர்கள். அமைச்சர் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: Even now lorries are plying on the streets. ஒரு மாதத்திற்கு 2.70 இலட்சம் ரூபாய் குடி தண்ணீருக்காக மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைத் தெரிந்து, அதன் அடிப்படையிலேதான் வேலூர் நகரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த அரசு சுழல் நிதியிலிருந்து 9.50 இலட்சம் ரூபாயை வழங்கி, அந்த நகருக்கு நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த இன்வெஸ்டி கேஷன் எல்லாம் முடிந்துவிட்டது. Investigation is over and this government will definitely take up this scheme to solve this problem.

(ஊ) ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் காலதாமதமாக நிறைவேற்றப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மேட்டூர் அணை அருகில் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சேலம், 11 நகரங்கள் மற்றும் 264 வழியோர கிராமங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பணிகளும் முடியும் தருவாயில் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பொதுவாக அமைக்கப்பட இருக்கும் தலைமைப் பணியிடம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் 97 விழுக்காடுகள் முடிக்கப்பட்டு விட்டது, மீதமுள்ள வேலைகள் டிசம்பர் மாத முடிவுக்குள் முடிக்கப்பட்டு இத்திட்டம் முழுப்பயனுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இப்பிரதான திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும் பொழுது 264 வழியோர கிராமங்களின் குடிநீர் விநியோகம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட 264 வழியோர கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 9 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, 10 நீரேற்று நிலையங்கள், 266.60 கி.மீ. கிளைப் பிரதானக் குழாய்கள் மற்றும் 104 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

98 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணியில் இதுவரை 45 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் யாவும் டிசம்பர் 1993–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஓமலூர் மற்றும் தாரமங்கலம் தொகுதியைச் சார்ந்த கிராமங்களும் டிசம்பர் 1993ல் குடிநீர் பெறும்.

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

மேட்டூர் தொகுதியைச் சார்ந்த ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் 11 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க தனியான திட்டம் ஒன்று ரூ. 367.17 இலட்சத்திற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான குடிநீரும் உலக வங்கித் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள நீரேற்று பிரதான குழாயிலிருந்து எடுக்கப்படவுள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை மேட்டூர், ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றியது. நான் கேட்டிருக்கிற கேள்வி, ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க தனியாக, ஒரு இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது ; அதைப் பற்றியது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் என்னுடைய கவன ஈர்ப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற கேள்வி மேட்டூர் அணையிலிருந்து ஓமலூர் தொகுதி, தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் தொகுதி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே ஏற்படும் காலதாமதம் பற்றிக் கேட்டிருக்கிறார். மேட்டூர் அணையிலிருந்து ஒரே ஒரு திட்டத்தைத்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளிலுள்ள வழியோரக் கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 11 நகரங்கள் உள்ளடங்கியது இந்தத் திட்டம். அடுத்ததாக சுமார் 264 வழியோரக் கிராமங்கள் பயன் படவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 60 கோடி ரூபாய் அளவிலே ஓமலூர் பகுதியிலும் சரி, தாரமங்கலம் பகுதியிலும் சரி, மேட்டூர் தொகுதியிலே ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் பதினோரு வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக தனியாக ஒரு திட்டமும் இந்தத் திட்டத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப் பணிகளும் விரைவாக உடனடியாகத் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். இது போதுமானது என்று கருதுகிறேன்.